DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE , FAST TRACK COURT, AMBATTUR
TIRUVALLUR DISTRICT

STC No.192/2023

Deposition of Witness for – Prosecution :**Pw1**

Defence :

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர் | : மணிவண்ணன் | | : | |
| த/பெ | : குப்புசாமி | மதம் | : | |
| கிராமம் | : ஆவடி | தொழில் | : இரும்பு பட்டறை | |
| வட்டம் | : | வயது | : 53/2025 | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of Date

---

**தேதி -12.09.2025**

**குறுக்கு_விசாரணை : Pw1**

1. எதிரியை எவ்வாறு தெரியும் என்றால் என் வீட்டில் இருந்து 4 வீடு தள்ளி தான் வசித்து வருகிறார். எந்த தேதியில் எதிரி ரூ.8,00,000/- கடன் கேட்டார் எந்த தேதியில் நான் பணம் கொடுத்தேன் என்றால் 29.01.2021 ஆம் தேதி பணம் கொடுத்தேன், அதற்கு 3 மாதத்திற்கு முன்பு கடன் கேட்டு வந்தார். எந்த தேதியில் பணம் கேட்டார் என்ற விவரத்தை எனது புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் தெரிவித்துள்ளேனா என்றால் தெரிவித்துள்ளேன். ரூ.8,00,000/- எவ்வாறு எதிரிக்கு தரப்பட்டது என்றால் ரொக்க பணமாக தான் கொடுத்தேன். தொழிலை விரிவாக்கம் செய்வதற்காக பணம் கேட்டிருந்தார். எதிரியின் தொழில் குறித்து ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. அம்பத்தூர், பட்டரவாக்கத்தில் புஸ் அடிக்கும் வேலை செய்யும் நிறுவனத்தில் தான் கடந்த 30 ஆண்டுகளாக வேலை பார்த்து வருகிறேன். எனது மாத சம்பளம் ரூ.27,000/- ஆகும். நான் எதிரிக்கு கடன் கொடுத்ததாக சொல்லப்படும் காலம் கொரோனா காலகட்டம் என்றால் சரிதான். அந்த காலகட்டத்தில் வேலை இருந்தது இல்லாமலும் இருந்தது என்றால் சரிதான். புகார் மற்றும் பிரமாண வாக்குமூலத்தில் வயிற்றின் அறுவை சிகிச்சை செய்தவற்கு வெளியில் தான் ரூ-2,00,000/- வாங்கியதாக கூறியிருந்தேன் என்றால் சரிதான். எனது

வயிற்று அறுவை சிகிச்சைக்கே பணம் வெளியில் இருந்து கடன் வாங்கி செய்த நிலையில் எவ்வாறு ரூ.8,00,000/- கொடுத்திருக்க முடியும் என்றும் நான் வழக்கறிக்காக கடன் கொடுத்ததாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

2. கொரோனா காலகட்டத்தில் வருமானம் இல்லாமல் இருந்ததால் எதிரியுடன் சேர்ந்து வியாபாரம் செய்யலாம் என்று ஆலோசித்து எதிரியிடம் இருந்து வியாபாரத்திற்காக காசோலை வாங்கப்பட்டது என்றால் சரியல்ல. ரூ.20,000/- த்திற்கு மேல் பணம் தரவேண்டும் என்றால் வங்கி மூலமாகவும், வரையோலை மூலமாகவும் தரவேண்டும் என்ற விவரம் என்ற விவரம் தெரியுமா என்றால் தெரியாது. இவ்வழக்கின் தொகையான ரூ.8,00,000/- த்திற்கு பூந்தமல்லி சார்வு நீதிமன்றத்தில் ஒரு உரிமையியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். அந்த வழக்கின் புகார்தாரர் ஆஜர்இல்லை என்று தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். மாதம் ரூ.27,000/- சம்பளம் வாங்கிய நிலையில் ரூ-8,00,000/- எதிரிக்கு கடனாக கொரோனா காலகட்டத்தில் தந்ததாக கூறுவது நம்பக்கூடியதாக இல்லை என்றால் ஏற்கெனவே சீட்டு எடுத்து வைத்திருந்தேன் என் மனைவியின் நகை அடமானம் வைத்து தான் எதிரி வற்புறுத்தலின் பேரில் கடனை 1% வட்டிக்கு கொடுத்தேன். நான் சீட்டு போட்டு தான் பணம் எடுத்து கொடுத்தேன் என்பதற்கு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி வற்புறுத்தி பணம் கேட்டதற்கு காவல் நிலையத்தில் புகார் ஏதேனும் கொடுத்தேனா என்றால் இல்லை. ரூ.8,00,000/- எதிரிக்கு கொடுத்தற்கு வருமான வரியில் காண்பித்துள்ளேனா என்றால் சிறுது சிறிதாக சேமித்து வைத்த பணத்தை தான் எதிரிக்கு கொடுத்தேன் வருமான வரியில் காண்பிக்கவில்லை. நான் வியாபாரம் செய்ய எதிரி பிணையாக நம்பிக்கையின் கொடுத்த அவரது காசோலையை தவறாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு கடன் கொடுத்ததை நிரூபிக்க காசோலை மற்றும் கடன் பத்திரத்தை தவிர வேறு ஆவணம் ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி மீது காழ்ப்புணர்ச்சி காரணமாக அவர் கொடுத்த காசோலையாக தவறுதலாக பயன்படுத்தியுள்ளேன் என்றால் சரியல்ல. இவ்வழக்கானது தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை இல்லை.

Digitally signed by
Tmt.K.Mahasakthi.B.B.A.,L.L.B.,(Hons)